| Liberté • Égalité • Fraternité<br>RÉPUBLIQUE FRANÇAISE<br>MINISTÈRE DE LA JUSTICE | 9<br># உரிமைகள் பிரகடனம்<br>## நீதிமன்றக் விசாரணைக்கு தள்ளிவைக்கும் கட்டளை இட்ட பிறகு தற்காலிக காவலில் இருக்கும் ஒரு நபருக்கு கொடுக்க |
|---|---|

நீங்கள் குற்றவியல் நீதிமன்றம் அல்லது பருவ நீதிமன்றத்திற்கு அனுப்பபடிருக்கும் நேரத்தில் சுதந்திரம் மற்றும் காவல் நீதிபதியால் தற்காலிக காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த ஆவணத்தில் உங்களுக்கு இருக்கிற பிரதான உரிமைகளை மற்றும் உங்களுக்கு கொடுக்கவேண்டிய பிரதான தகவலையும். நினைவுபடுத்துகிறது

***நீங்கள் காவலில் இருக்கும் காலம் முற்றிலும்.இந்த ஆவணத்தை வைத்து கொள்ளலாம்***

### குற்ற விவரம் மற்றும் தீர்ப்பின் திகதி அறிதல்

நீங்கள் சம்மந்தப்பட்ட இந்த குற்றத்தின் சட்ட குறிப்பு, நடைபெற்ற திகதி மற்றும் இடத்தை தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது. நீங்கள், தீர்ப்பு கூற இருக்கும் நீதிமன்றம் போகவேண்டிய திகதி நிறுத்த பட்டால் உங்களுக்கு அதை தெரியபடுத்த வேண்டும்.

### ஒரு வழக்கறிஞரால் உதவி

இந்த வழக்கு நடைபெறும் வரை, நீங்கள் தேர்ந்தெடுத்த அல்லது அரசாங்கம் கொடுக்கின்ற ஒரு வழக்கறிஞரின் உதவியை நாடலாம்.

நீங்கள் சுதந்திரமாக வழக்கறிஞருடன் உரையாடலாம் அல்லது கடிதம் அனுப்பலாம், மற்றும் அவர் உங்கள் எல்லா விசாரணைகளுக்கும் வரலாம், அதை பற்றி அவருக்கு தெரிவிக்க வேண்டும். கோப்பின் விவரங்களை அவர் தெரிந்து கொள்ளலாம்.

### மௌனத்தை கடைபிடிக்கும் உரிமை

உங்கள் விசாரணை நேரத்தில், அறிக்கை அளிப்பதா, உங்களை கேட்கபோகிற கேள்விகளுக்கு பதிலளிப்பதா அல்லது மௌனமாக இருப்பதா என்று நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

### ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி

நீங்கள் பிரெஞ்சு மொழியை பேசுபவர் அல்லது புரிந்து கொள்பவராக இல்லை என்றால், உங்கள் விசாரணைக்கும், உங்கள் வழக்கறிஞர் உடன் முறையிடவும்

உங்களுக்கு இலவசமாக ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவி கேட்க உரிமை இருக்கிறது.

## உங்களை விடுவிக்க கேட்கும் உரிமை

எந்நேரமும் உங்களை விடுவிக்க நீங்கள் நீதிபதியிடம் கோரிக்கை வைக்கலாம். அந்த கோரிக்கை குற்றவியல் நீதிமன்றத்தால் நீங்கள் சட்ட விரோத செயல் செய்திருந்தால் மற்றும் விசாரணை அறையில் நீங்கள் குற்றம் செய்திருந்தால் கவனிக்கப்படும்.

## சுதந்திரத்தை இழப்பு கால அளவு

நீங்கள் தற்காலிக காவலில் வைக்கப்படும் நேரத்தில் இருந்து, நீங்கள் குற்றவியல் நீதிமன்றத்திக்கு முன் அனுப்பபட்டால் இரண்டு மாததிற்குள் கூப்பிட படவேண்டும், மற்றும் உங்களை பருவ நீதிமன்றதிற்கு அனுப்பபட்டால்ஒரு வருடத்திற்குள் கூப்பிட படவேண்டும்.

## சில நபருக்கு தெரிவிப்பது

உங்களுக்கு விருப்பப்பட்ட நபருக்கு குறிப்பாக உங்கள் குடும்பத்தை சேர்ந்தவருக்கு நீங்கள் தற்காலிக காவலில் இருப்பதை தெரிவிக்கலாம்.

நீங்கள் வெளிநாட்டை சேர்ந்தவராக இருந்தால், உங்கள் நாட்டின் தூதரக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## மருத்துவ பரிசோதனை

நீங்கள் ஒரு மருத்துவ பரிசோதனை கேட்கலாம்.

## உங்கள் கோப்பை பார்க்க

உங்கள் விசாரணை கோப்பின் நகலை கேட்டு வாங்கலாம், தேவைபட்டால் அதை டிஜிட்டல் நகலாய் வாங்கலாம்.